**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.310/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | செல்வி |
| Father's Name/Husband Name: | பிச்சை |
| Village : | கள்ளப்பட்டி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.06.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் வீட்டில் தான் உள்ளேன். 2016ம் வருடம் 1ம் எதிரி ராமசாமிக்கு என்னுடைய வீட்டை வாடகைக்கு விட்டிருந்தேன். நான் வீட்டை காலி செய்ய சொன்னேன். வீட்டிற்கு அட்டை போட வேண்டும் என்று எதிரி ராமசாமி என்னிடம் கேட்டார் , நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அதற்கு எதிரி ராமசாமி அவருடைய மனைவி ராஜாத்தி மற்றும் நான் புகாரில் சொல்லியுள்ள அனைத்து எதிரிகளையும் அழைத்து வந்து சட்ட விரோதமாக ஒன்று கூடி என்னையும் எனது அக்கா தங்கப்பொண்ணு என்பவரையும் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள்.

உருட்டுக் கட்டை, கம்பி எடுத்து வந்து எங்களை மிரட்டினார்கள். என்னுடைய ஜாக்கெட் , சேலையை பிடித்து மானப்பங்கப்படுத்தி காலால் எட்டி அனைத்து

எதிரிகளும் உதைத்தார்கள். எதிரி ராமசாமி அவர் வைத்திருந்த கத்தியால் எனது இடது கை முழுங்கைக்கு மேலே கிழித்துவிட்டார். உருட்டுக்கட்டையால் என்னுடைய தலையில் அடித்தார். உங்களை உயிரோடு விட்டால் ஊரில் ஒரு பையனும் எங்களை மதிக்க மாட்டான் செத்து தொலைங்கடா என்று சொல்லி எதிரிகள் என்னை அடித்தார்கள்.

எனது அக்கா மகன் ரமேஷ் தகவல் தெரிந்து வந்து என்னை பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். எதிரி ராஜாத்தி, ராமசாமி , பிரியா, கலியன், பழனி , சரோஜா ஆகியோர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மீதும் , எனது அக்கா செல்வி மீதும் , எனது அக்காவின் மகன்களாக சரவணன் , ரமேஷ் ஆகியோர்கள் மீதும் அரும்பாவூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 265/2016 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அது வேப்பந்தட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் C.C No.46/2021 என்ற வழக்கு இருந்து விடுதலையாகிவிட்டது என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கானது எதிரி ராமசாமியால் எங்களுக்கு எதிராக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் என்ன எழுதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை நபர்கள் என்னை சேர்ந்து அடித்தார்கள் என்றால் நான் முதல் விசாரணையில் சொன்ன நபர்கள் மற்றும் எனக்கு அடையாளம் தெரியாத 4 நபர்கள் என்னை அடித்தார்கள்.

அந்த அடையாளம் தெரியாத நபர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் என்னை எதிரிகள் கத்தியால் எனது தலையிலும், இடது கையிலும் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கத்தி மற்றும் உருட்டுக் கட்டையை போலிசார் வாங்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் என்னிடம் எழுதி கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி, மாதம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல, 2016ம் வருடம் 9ம் மாதம் 15ம் தேதி மாலை 04.30 மணியளவில் சம்பவம்

நடந்தது. எதிரிகள் கிழித்ததாக சொல்லப்படும் எனது ஜாக்கெட் மற்றும் புடவையை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரிகள் எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும், அதனால் தான் எதிரி அளித்த புகாருக்கு முதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டு அதன்பின்னிட்டு நான் அளித்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. யாரெல்லாம் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் என்னையும், எனது அக்காவையும் எனது அக்காவின் மகன் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றான். சம்பவம் நடந்த மறுநாள் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை யார் டைப் செய்தார்கள் என்றால் போலிசார்கள் , அதில் நான் கைரேகை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகாரை கையால் தான் எழுதிக் கொடுத்தேன் என்றால் அடுத்தவர்கள் எழுதிக் கொடுத்தார்கள், நான் கொடுத்தேன். சம்பவம் நடக்கும் போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் நானும் எனது அக்கா மட்டும் தான் இருந்தோம் வேறு யாருமில்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.